# பாட்டாளி சிந்தனை

Volume 34 No 6

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

February 2024

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

# லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டு நிகழ்வு






கொல்கத்தாவில் நடைபெற்ற மாபெரும் லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டு பொதுக்கூட்டம்



**கூட்டத்தில் அலைகடலென பங்கேற்ற மக்கள் திரள்**




**கொல்கத்தாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் உரை**

இவ்வாண்டு ஜனவரி 21ஆம் நாள் எவரேனும் ஒருவர் கொல்கத்தாவின் சாகித் மினார் மைதானத்திற்குச் சென்றறிருந்தால், உலக பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதியான கோடானுகோடி இந்திய உழைக்கும் மக்கள் உள்ளத்தில் இன்றும் எத்தகைய உயரிய சிம்மாசனத்தில் மாபெரும் தலைவர் லெனின் குடிகொண்டிருக்கிறார் என்பதை கண்டிருப்பார். தோழர் லெனின் உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை சோசலிசப் புரட்சியின்மூலம் முதன் முதலில் இரஷ்யாவில் நிறுவியவர். உலகிற்கு வழிகாட்டக்கூடிய இக் காலகட்டத்தின் உன்னத தலைசிறந்த தத்துவமாம் மார்க்சிசத்தின் மிகச்சிறந்த தலைவர். முதலாளித்துவ சுரண்டல் நுகத்தடியிலிருந்து பாடுபடும் ஏழை நடுத்தர மக்களை விடுவித்து உற்பத்தியை நிர்வகிக்கும் அதிகாரத்தை அடையச் செய்து பல நூற்றாண்டுகளாக வளர்ச்சி பெற்ற அமெரிக்கா இங்கிலாந்து ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு இணையாக சில பத்தே ஆண்டுகளில் வளர்ச்சிபெற்ற நாடாக ரஷ்ய சோவியத் சோசலிஸ்ட் குடியரசை உருவாக்கி சரித்திரம் படைத்த நாயகர். அவர் மறைந்து நூறு ஆண்டுகளாகியிருக்கும் இம் மகத்தான நாளைக் கூட, எடுத்துக்காட்டாக மிளிரும் அவரது வாழ்க்கைப் படிப்பினைகளை மக்களிடம் எடுத்துச் செல்ல மறந்துவிட்டார்கள் மார்க்சிஸ்ட் என்ற பெயர் புனைந்த போலி மார்க்சிஸ்டுகள்.


தொடர்ச்சி 2ம் பக்கம்


## மதுரையில் மாமேதை லெனின் நினைவு நூற்றண்டு






**மதுரையில் நடைபெற்ற லெனின் நினைவு நூற்றாண்டு பொதுக்கூட்டத்தில் தோழர் ஆ ரெங்கசாமி, மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார், கூட்டத்தில் கலந்துகொண்டோர்**

ஜனவரி 20, 2024 அன்று மாமேதை லெனின் நினைவு நூற்றாண்டு பொதுக்கூட்டம் மதுரை கோரிப்பாளையம், பள்ளிவாசல் திடலில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினரும், மதுரை மாவட்டச் செயலாளருமான தோழர் எம் ஜெ வால்டேர் தலைமையில் நடைபெற்றது. துவக்கத்தில் நவம்பர் புரட்சி ஓங்குக, மார்க்சிசம்–லெனினிசம் ஓங்குக, முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சி ஓங்கி வளர்க, சாதி, மத, இன பிரிவினை சக்திகளுக்கு எதிராக ஒன்றிணைவோம், பாசிசத்தை முறியடிப்போம், உலகத்தொழிலாளர்களே ஒன்று படுவோம் என்ற முழக்கங்கள் பொது மக்களை மிகவும் ஈர்த்தது. அடுத்து தோழர் லெனின் அவர்களுக்கு தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி செவ்வணக்க அஞ்சலி செய்து சிறப்புரையாற்றினர். தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர்கள் தோழர்கள் எஸ் கணேசன், அ அனவரதன் ஆகியோர் உரையாற்றினர் ■

# லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டு . . .

*1ம் பக்கத் தொடர்ச்சி*

ஆனால் மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின் ஸ்டாலின் மாசேதுங் வழி வந்த, இக் காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய தலைவர்களுள் ஒருவரான தோழர் சிப்தாஸ் கோஷ் நிறுவிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி, லெனின் நினைவு நூற்றாண்டை அதிசிறப்பாகக் கொண்டாட தனது தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் முனைப்புடன் செயல்படக் கேட்டுக்கொண்டது. நாடெங்கும் சுவரெழுத்துக்கள் சுவரொட்டிகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. லெனின் மேற்கோள் கண்காட்சிகள், பொதுக்கூட்டங்கள் போன்றவை பரவலாக நடத்தப்பட்டன. மேலும், லெனின் எழுதிய 'அரசும் புரட்சியும்', 'தேசியப் பிரச்சினை', 'பொருள்முதல்வாதமும் அனுபவ வாத விமரிசனமும்', 'இடதுசாரிவாதம் ஓர் இளம்பருவக் கோளாறு' போன்ற முக்கிய புத்தகங்களை தோழர்கள் குழுவாக வாசித்தனர். பல்வேறு மாநிலங்களில் முக்கிய நகரங்களில் ஊர்வலங்கள் பொதுக்கூட்டஙள் நடத்தப்பட்டன. இறுதியாக, ஜனவரி 21 அன்று கொல்கத்தாவில் உள்ள சாகித் மினார் (தியாகிகள் நினைவு) மைதானத்தில் லெனின் நினைவு நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நிகழ்ச்சி அன்று, செங்கொடிகளாலும், லெனினின் உருவப்படங்களாலும் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மைதானத்திற்கு தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மகளிர் திரள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், பத்திரிகையாளர்கள், சிறு குறு வியாபாரிகள் ஐடி தொழிலாளர்கள் ஆட்டோ ஓட்டுனர்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் திரளாக குவியத் துவங்கினர். ஒருபுறம் வரும் தேர்தலில் யாரோடு கூட்டு சேர்ந்தால் எவ்வளவு ஓட்டுகளையும் சீட்டுகளையும் பெறலாம் என்ற கணக்கு போட்டுக்கொண்டிருக்கும் கட்சிகளும் மறுபுறம், எப்படியெல்லாம் மக்களிடம் மத உணர்வைத் தூண்டிவிட்டு கண்மூடித்தனத்தை வளர்த்து பெரும்பான்மை மதத்தினரை வாக்கு வங்கியாக மாற்றும் வேலையில் மூழ்கியிருக்கும் கட்சிகளும் இருக்கும் நாட்டில், நமது கட்சியின் அறைகூவலை செவிமடுத்து உயர்ந்த உன்னத கம்யூனிசத் தத்துவத்திற்கு மதிப்பளித்து வரும் மக்கள் இவ்வளவு எண்ணிக்கையில் இருப்பது, மாபெரும் தலைவர் லெனினின் மீது மக்கள் கொண்டிருக்கும் மரியாதையை மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலமும் புரட்சிகரப் பாதையில் பயணிக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

எடுத்துக்காட்டாக, மேற்கு வங்க நதியா மாவட்டத்தில், விவசாயிகள் இயக்கத்தை நடத்திவரும் பரேஷ் ஹல்தர், தங்கள் போராட்டத்தை வலுப்படுத்த சோவியத் மாடலில் கமிட்டிகளை அமைத்துப் போராடுவதாக கூறினார். அவரது நண்பர் விஷ்வநாத் மண்டலும், இத்தனை பெரிய மேடை மற்றும் கூட்டத் திடல் அலங்காரத்தைக் கண்டு வியந்து பாராட்டினர். மே.வங்க புருலியா மாவட்டத்தில் ஓர் கிராம வீட்டுப் பெண்மணி, லெனின் மேற்கோள் புகைப்படக் கண்காட்சியைக் கண்டுகளித்து, எங்ஙனம் சோவியத் ரஷ்யாவில் பெண்கள் மீது சுரண்டலற்ற பாதுகாப்பான சமுதாயத்தை லெனின் புரட்சியின்மூலம் உருவாக்கினார் என்று மேலும் அறிந்துகொள்ளும் ஆவலை வெளியிட்டார். மேலும், அன்றைய சோசலிச ரஷ்யாவில் மிகச் சிறந்த மருத்துவமனைகள் முற்றிலும் இலவசமாக உயர்தர சிகிச்சைகளை மக்களுக்கு வழங்கியது என்று அறிந்து வியந்தார். அன்றைய நாட்களில் இந்தியா போன்ற பின்தங்கிய மற்றும் வளரும் நாடுகளின் மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி உட்பட பல்வேறு பாடங்களில் கல்லூரிகளில் இலவசமாக அனுமதி அளிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியில் மார்க்சிசத்திற்கு எதிரான, திருத்தல்வாதத் தலைமை வழியாக முதலாளித்துவ வர்க்கம் 1990க்குப் பின் சோவியத் யூனியனில் ஆட்சியைக் கைப்பற்றியபின் குடியரசுகள் பிரிந்து, சுரண்டல் அமைப்பை நிறுவி, இன்று அதே கல்லூரிகளில் கல்வியை வியாபாரமயமாக்கி விட்டன. மிகக் குறைந்த மதிப்பெண்பெற்ற வெளிநாட்டு மாணவர்களுக்கு பணத்திற்கு சீட்டுக்களை விற்கின்றனர். மீண்டும் பழைய சுரண்டலற்ற சோசலிச அமைப்பு வரவேண்டும் என அப்பெண்மணியும், கூட்டத்திற்கு வந்திருந்த சில மருத்துவர்களும் கருத்து தெரிவித்தனர்.





**தோழர் சந்திதாஸ் பட்டாச்சார்யா, பொலிட்பீரோ உறுப்பினர், மேற்கு வங்க மாநில செயலாளர் மற்றும் தோழர் ஜெய்சன் ஜோசப், மத்திய கமிட்டி உறுப்பினர், கேரள மாநில செயலாளர் உரையாற்றினர்**

கூட்டத்திற்கு தோழர் சுமன் பாசு தலைமைதாங்கினார். முதலில் உரையாற்றிய மத்தியக் கமிட்டி உறுப்பினரும் கேரளா மாநில எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) செயலாளருமான தோழர் ஜெய்சன் ஜோசப், சோசலிச அமைப்பு சிதைந்தபிறகு எவ்வாறு இன்றைய முதலாளித்துவ உலகம் மீண்டும் துணிந்து உலகெங்கும் போர்களை நடத்துகின்றது என்று விளக்கினார். மேலும், மத்தியில் ஆளும் பாஜகவும் கேரள மாநிலத்தில் ஆளும் சிபிஐ (எம்) அரசாங்கமும் இந்திய ஏகபோக கார்ப்பொரேட் முதலாளிகளின் கொள்கைகளை அமுலாக்கிக் கொண்டிருக்கின்றன என்றார். அடுத்துப் பேசிய பொலிட்பீரோ உறுப்பினரும் மே.வங்க கட்சிச் செயலாளருமான தோழர் சந்திதாஸ் பட்டாச்சார்யா, லெனின் பெயர் இன்றும் எவ்வாறு ஏழைமக்கள் மனதை ஆட்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார். மாநிலத்தில் பாஜக ராமர் கோயிலுக்கு ஆதரவான யாத்திரை நடத்துவதும், மம்தா பானர்ஜி கோயில் மசூதி குருத்துவாரா சர்ச் யாத்திரை நடத்துவதும், காங்கிரஸ் 'நியாய யாத்திரை' நடத்துவதும் எல்லாமே ஓட்டுக்காக மட்டுமே செய்வதாக சுட்டிக் காட்டினார்.

இறுதியாக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் தனது சிறப்புரையாற்றினார். உலகின் முதல் சோசலிச அமைப்பை உருவாக்கிய லெனின், ஏழை பணக்காரர் வேறுபாட்டை என்றுமே ஒழிக்கவே முடியாது என்ற கருத்தை தகர்த்துக் காட்டினார். மார்க்ஸ் முன்னறிவித்த சமூக வளர்ச்சியை லெனின் நடைமுறைப்படுத்திக் காட்டியது மட்டுமின்றி போலி மார்க்சிஸ்டுகளின் மத பிரச்சாரத்தையும் தத்துவார்த்த ரீதியில் முறியடித்தார். ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்கும் கோட்பாடுகளையும் வகுத்துக் கொடுத்தவர் லெனின் அவர்களே. முதலாளித்துவ சுரண்டல் அமைப்புதான் எல்லாவகையான ஏற்றத் தாழ்வுகளுக்கும் அநீதிகளுக்கும் காரணமாக இருக்கின்றதென்றும், வாக்கு அரசியல் நடத்தும் எல்லா கட்சிகளும் ஏகபோக முதலாளித்துவ கார்ப்பொரேட்டுகளுக்கு சேவகம் புரியும் அடிவருடிகள் என்றும் குறிப்பிட்ட தோழர் பிரவாஸ் கோஷ், வலதுசாரி அரசியலை முறியடிக்க ஒன்றுபட்ட இடதுசாரி மாற்றுயென மக்கள் போராட்டங்களை வழிநடத்த வேண்டும் என காலத்தின் அழுகுரல் மன்றாடுகிறது என்று வலியுறுத்தினார்.

சர்வதேச கீதம் இசைக்கப்பட்டபின் பொதுக்கூட்டம் நிறைவுற்றது ■



**கொல்கத்தாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் உரை**

# பாஜகவின் ராமர் கோவில் திறப்பு நிகழ்வு மதவெறி அரசியலுக்காகவே அன்றி பக்தியினால் அல்ல

அயோத்தியில் ராமர் கோவில் திறப்பதை வைத்து பாஜக மிகப்பெரும் ஆரவார ஆர்ப்பாட்டம் செய்கிறது. அக்கட்சி ஏதோ ராமர்மீதோ அல்லது இந்து மதத்தின்மீதோ பக்தி கொண்டிருக்கவில்லை. 2024 பாராளுமன்ற தேர்தல் நெருங்கும் இச்சமயத்தில் இக்கோவில் திறப்புவிழாவை நரேந்திர மோடி அரசாங்கம் ஏன் நடத்துகிறது என்பது சொல்லித் தெளியவேண்டிய தில்லை. ராமர் சிலை பிரதிஷ்டை செய்யும் நாளில் நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் விளக்கேற்றுங்கள் என மோடியும் அவரது கட்சியும் அறைகூவல் விடுப்பதும் ஊடகங்களில் மிகப்பெரிய பிரச்சாரங்கள் செய்வதும் தங்களுடைய 10 ஆண்டுகால தோல்விகளை மறைத்து, நாட்டு மக்களை மதவெறியில் ஆழ்த்தி வாக்குகளைப் பெற்று மீண்டும் 3வது முறையாக ஆட்சியை கைப்பற்றவேயாகும்.

'காங்கிரஸ் ஆட்சி நாட்டை நாசமாக்கிவிட்டது. அடுத்து பாஜக ஆட்சிக்கு வந்தால் நல்ல நாட்களை 'அச்சாதின்' தருவோம், விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம், வருடம் 2 கோடி இளைஞர்களுக்கு வேலை தருவோம், ஆட்சிக்கு வந்த நூறே நாட்களில் வெளிநாட்டு கறுப்புப்பணத்தையெல்லாம் பறிமுதல் செய்து ஒவ்வொருவருக்கும் ரூ15 இலட்சம் தருவோம், பெட்ரோல்–டீசல் விலையைக் குறைப்போம்' என்றெல்லாம் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. மாறாக, டாடா, பிர்லா, அம்பானி, அதானி போன்ற பகாசுர ஏகபோக முதலாளிகள் தங்கள் செல்வத்தை பலமடங்கு பெருக்கிக்கொள்ளும் வகையில் திட்டங்களைத் தீட்டினர். ஆனால், பணமதிப்பு நீக்கம், கொரோனா 2வது அலையின் போது நிர்வாக திறனின்மையால் ஆக்சிஜன் இல்லாமல் இலட்சக்கணக்கில் மக்கள் மரணமடைந்தது, விவசாயிகள் போராட்டம், அதை ஒடுக்க கட்சியாட்களையும் நிர்வாகத்தையும் பயன்படுத்தி செங்கோட்டையில் தேசியக் கொடியேற்றி விவசாயிகள் மீது வீண்பழி சுமத்தி நாடகமாடியது, தொழிலாளர் சட்டங்களை நான்கு தொகுப்புகளாகக் குறைத்து அவர்கள் உரிமைகளை பறித்தது, மாட்டிறைச்சி பிரச்சினை, மணிப்பூர் கலவரம் என எண்ணற்ற கொடுமைகளைச் செய்தது மத்திய பாஜக அரசாங்கம்.

இவ்வாறான மக்கள் விரோத ஆட்சியின் காரணமாக மக்களிடம் கடும் அதிருப்தி ஏற்பட்டு மோடி மற்றும் அவரது ஆட்சிக்கு எதிர்ப்பு அலை நாடுமுழுக்க வீசியது. கர்நாடக சட்டமன்ற தேர்தல் தோல்விக்குப் பிறகு கேஸ் விலையை ரூ200 குறைத்ததன் காரணம் பாஜகவிற்கு எதிரான எதிர்ப்பு அலை நாடு முழுவதும் வீசியதாகும். பணபலம் ஆட்பலம் தவிர மக்களை அறியாமையில் மூழ்கடிக்கும் மதவெறி அரசியலையும் வழக்கம் போல் மீண்டும் பாஜக கையிலெடுத்துவிட்டது.

எனவேதான் அயோத்தி ராமர் கோவில் விஷயத்தை பாஜக நீண்டகாலமாக எழுப்பிவந்தாலும் கடந்த வாஜ்பாய் தலைமை யிலான என்டிஏ கூட்டணி ஆட்சியின்போதும்சரி, தற்போதைய 10 ஆண்டுகால ஆட்சியிலும் சரி, ராமர் கோவிலை ஏன் திறக்க முயற்சிக்கவில்லை? இப்போது மட்டும் ஏன் அவசரப்படுகிறது? ராமர் கோவில் கட்டுமானங்களை கட்டிமுடிக்க இன்னும் 2 ஆண்டுகள் ஆகும் என சொல்லப்படுகிறது. அத்தகைய நிலையில் தற்போது உடனே திறக்கவேண்டிய அவசியம் என்ன? மதவெறியைத் தூண்டி மக்களின் ஒருபகுதியினரின் அறியாமையைப் பயன்படுத்தி ஆட்சியை பிடித்து விடலாம் என்பதே இக் கோயில் திறப்பின் நோக்கம். இது முற்றிலும் அரசியல் நோக்கம் கொண்டதேயன்றி வேறல்ல.

எல்லாவற்றிற்கும் மேலாக, கோவில் விவகாரத்திற்கும் அரசியல்வாதிக்கும், அதாவது பிரதமர், ஜனாதிபதி போன்ற அரசு அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் என்ன சம்மந்தம்? கோவில் விவகாரத்தை சம்மந்தப்பட்ட நபர்கள் பார்த்துக் கொள்ளலாமே? பிரதமருக்கு அங்கு என்ன வேலை? அதுமட்டுமின்றி ஒவ்வொரு நொடியும் ஊடகங்கள் அவரது பூஜைகளையும் கோயில்களில் சஞ்சரிப்பதையும் படம்பிடித்து ஓய்வின்றி ஊடகங்கள் காட்டிக்கொண்டேயிருந்தன.

மேலும், அயோத்தி ராமர் கோவில் அமைந்துள்ள இடம் உத்திரப்பிரதேச மாநிலம். அங்கு 80க்கும் மேற்பட்ட பாராளுமன்ற தொகுதிகள் உள்ளன. அந்த மாநிலத்திலும் அம்மாநிலத்தின் அருகேயுள்ள சில மாநிலங்களிலும் மதவெறியைத் தூண்டி கணிசமான தொகுதிகளை வென்றுவிட்டால் நாட்டின் பிற பகுதிகளிலும் ஏதாவது தகிடுதத்தங்கள் செய்து பெரும்பான்மையாக 282 தொகுதிகளை பிடித்துவிடலாம் என பாஜக கணக்கு போடுகிறது. ஆகவேதான் கோவில் கட்டுமானம் இன்னும் நிறைவுபெறாத நிலையிலும் ராமர் கோவிலை நரேந்திர மோடி திறந்துள்ளார். இது அரசியல் நோக்கத்திற்காகவே அன்றி ஆன்மிக்க உணர்வால் அல்ல ■


# நேதாஜி 127வது பிறந்த தினம்

நேதாஜி 127வது பிறந்த தினம் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO), அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS) சார்பாக பல்வேறு இடங்களில் நேதாஜி புகைப்பட மேற்கோள் கண்காட்சிகள், கூட்டங்கள், என நிகழ்ச்சிகளை நடத்தன.

தேனி மாவட்டத்தில் அல்லிநகரத்தில் நேதாஜி உருப்படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டில் காமக்காப்பட்டியில் நேதாஜி இளைஞர் குழு விளையாட்டுப் போட்டி நடத்தினர். புதுக்கோட்டை மாவட்டம் மீமிசல், மதுரை, சென்னையில் கொளத்தூர், கொருக்குப்பேட்டை ஆகிய இடங்களிலும், நெய்வேலியிலும் புதுச்சேரி மாநிலத்திலும் நேதாஜி பிறந்ததினம் அனுசரிக்கப்பட்டது ■



காமக்காப்பட்டி, தேனி மாவட்டம்




தேனி



நெய்வேலி



புதுச்சேரி



சென்னை




கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கத்தின் வேலையின்மைக்கு எதிராக நடைபெற்ற பேரணியில் தமிழ்நாடு மாநிலத் தலைவர் தோழர் ராஜகோபால் கலந்துகொண்டார் ■



நெய்வேலியில் மின் துறையை தனியாருக்கு தாரை வார்த்தல், ஸ்மார்ட் மீட்டர் பொருத்துதல், சிறு தொழில்களை பாதிக்கும் மின் கட்டண உயர்வு ஆகிய வற்றை கண்டித்து அகில இந்திய மின் நுகர்வோர் சங்கம் சார்பாக நடைபெற்ற அகில இந்திய கண்டன நாள் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on : 25th to 31st
Publication: First week of Every Month

பாட்டாளி சிந்தனை
PAATTALI CHINTANAI

Registered with the Registrar of
Newspapers for India No : 62018/1988
TN/CCN/429/2024-2026
TN/PMG(CCR)WPP/373/2024-2026

# பொதுக் கல்வி அமைப்பை பாதுகாக்கக் கோரியும் என்இபி 2020ஐ திரும்பப்பெறக் கோரியும் கல்விப் பாதுகாப்பு மாநாடு

பொதுக் கல்வி அமைப்பை பாதுகாக்கக் கோரி, அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் (AISEC) தமிழ்நாடு மாநில அமைப்பு சார்பில் பொதுக் கல்வி பாதுகாப்பு மாநில மாநாடு சென்னை நிருபர்கள் சங்கத்தில் ஜனவரி 27, 2024 அன்று நடைபெற்றது.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட கல்வி யாளர்கள் மற்றும் பேராசிரியர்கள், அரசு | அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் இன்றைய நிலைகளான அடிப்படை வசதிகள், காலி ஆசிரியர் பணியிடங்கள், தற்காலிக ஆசிரியர் நியமனங்கள், எமிஸ் (EMIS) போன்ற கற்பித்தல் அல்லாத பிற பணிகள் ஆசிரியர்கள் மீது திணிப்பு மற்றும் தமிழ்நாடு அரசாங்கம் அதனை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு அதன் அம்சங்களை அமல்படுத்துவதில் தீவிரம் காட்டுகிறது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் நுணுக்கமாக விவாதிக்கப்பட்டது.

மேலும் மதசார்பற்ற, அறிவியல்பூர்வமான, ஜனநாயகக் கல்வியை அனைவருக்கும் உத்திரவாதப் படுத்தப் போராடிவரும் அகில இந்திய கல்வி பாதுகாப்பு கமிட்டி, தமிழ்நாடு தயாரிப்பு குழுவின் சார்பாக தனது முதலாவது மாநில மாநாட்டில் பொதுக் கல்வி அமைப்பை பாதுகாக்கும் நோக்கிலான பல தீர்மானங்கள் விவாதங்களுக்கு பின் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன.

மாநாட்டில் திரு சீ ஹோ திலகர் மாநிலத் தலைவராகவும், திரு க யோகராஜன் மாநிலச் செயலாளராகவும் கொண்ட புதிய மாநிலக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநில மாநாட்டிற்குப் பின்பு பிப்ரவரி 3, 2024 அன்று டில்லியில் அகில இந்திய கல்வி பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. புகழ்பெற்ற வரலாற்றியலாளர் இர்ஃபான் ஹபீப் இம்மாநாட்டை துவக்கி வைத்தார். தேசிய கல்விக் கொள்கை 2020ஐ திரும்பப்பெற்று மக்களுக்கான மாற்று கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த மாநாட்டில் தீர்மானம் இயற்றப்பட்டது. பேரா தருண் காந்தி நஸ்கர் அவர்களை பொதுச் செயலாளராகக் கொண்ட புதிய அகில இந்திய கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது ■



சென்னையில் கல்விப் பாதுகாப்பு மாநில மாநாட்டில் மாநில தலைவர்கள்



சென்னையில் கல்விப் பாதுகாப்பு மாநில மாநாட்டில் கலந்துகொண்டோர்



புதுதில்லியில் நடைபெற்ற அகில இந்திய கல்வி பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள்


புதுதில்லியில் அகில இந்திய கல்விப் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டோர்

# எஸ்கேஎம் அறைகூவலுக்கிணங்க நாடு முழுவதும் விவசாயிகளின் பேரியக்கம்

ஜனவரி 26, 2024 நாடு முழுவதும் எஸ்கேஎம் வாகனப் பேரணியை நடத்தியது அதற்கு மத்திய தொழிற்சங்கங்கள் ஆதரவு கொடுத்தது.

வேளாண் உற்பத்தி பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதாரவிலை, விவசாயக்கடன் தள்ளுபடி, உரம், பூச்சி மருந்து மானிய விலையில் கொடுத்தல், மின்சார சட்டத் திருத்த மசோதாவை ரத்து செய்தல், ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா டேனி (லக்கிம்பூர் கேரி படுகொலையின் பின்னணியில் உள்ள முக்கிய சதிகாரர்) பதவி நீக்கம் செய்யப்பட்டு, அவர்மீது வழக்குத் தொடருதல், தனிநபர் வருமானம் குறைவு, வளர்ந்து வரும் வருமான சமத்துவமின்மை, தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறுப்பு இது போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பேரணி நடத்தப்பட்டது, அதில் தமிழ்நாட்டில் சேலம், திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர் சங்கம் (AIKKMS) பங்கேற்பு ■


சேலம்



திண்டுக்கல்


புதுக்கோட்டை


தேனி

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**